**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

O.S No. 34 of 2023

Deposition of D.W. 2

Name of the Witness: திரு.கோவிந்தராஜ்

Date : 02.06.2026

**குறுக்கு விசாரணை**

நான் தினகூலி வேலை செய்து வருகிறேன். எனக்கு 20 சென்ட் நிலம் உள்ளது. இறந்து போன காந்தியின் பாட்டியும், எனது பாட்டியும் அக்கா, தங்கை உறவுமுறை. 16.12.1994ம் தேதி நடைபெற்ற 2ம் பிரதிவாதி சாரதா திருமணத்திற்கு நான் சென்றிருந்தேன என்றால் நான் சென்றிருந்தேன். 2ம் பிரதிவாதி சாரதா போயர் சமூகத்தை சேர்ந்தவர். இறந்து போன காந்தி எந்த சமூகத்தை சேர்ந்தவர் என்றால் வன்னியர் சமூகத்தை சேர்ந்தவர். 1ம் வாதி சுமதியை எனக்கு யார் என்றே தெரியாது. கோபாலபுரம் சர்க்கரை ஆலையில் பணியில் இருந்த போது தான் மேற்படி காந்தி இறந்து போனார் என்றால் சரிதான். அவரது இறப்பிற்கு நான் சென்றிருந்தேன என்றால் நான் சென்றிருந்தேன். அவரது ஈம சடங்கிற்கான தொகையினை மேற்படி கோபாலபுரம் சர்க்கரை ஆலை நிறுவனத்தினர், அவரது மனைவி என்ற முறையில் சுமதியிடம் தான் மேற்படி தொகையை கொடுத்து கையெழுத்து பெற்று சென்றனர் என்றால், அதை பற்றி எனக்கு தெரியாது. இறந்து போன காந்தியின் தாயார் தற்போது யாருடன் வசித்து வருகிறார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. மேற்படி காந்திக்கும் சுமதிக்கும் அரசியல் பிரமுகர் ஜி.கே.மணி தலைமையில் காந்தியின் இல்லத்தில் அவருக்கும் சுமதிக்கும் திருமணம் நடைபெற்றது என்றால் அந்த திருமணத்தை பற்றி எனக்கு

தெரியாது, நான் செல்லவில்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் இரண்டு புகைபடத்தில் திரு.ஜி.கே,மணி தலைமையில் காந்திக்கும், சுமதிக்கும் நடைபெற்ற திருமண நிகழ்வு என்றால் மாப்பிள்ளையாக இருப்பவர் காந்தி தான், ஆனால் நான் திருமணத்திற்கு செல்லவில்லை. மேற்படி புகைபடங்கள் ***வா.சா.ஆ.19*** ஆகும். *(மேற்படி புகைபடங்களை குறியீடு செய்வதில் பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டது. புகைபடத்தில் உள்ள காந்தி என்பவரின் நபரை சாட்சி அடையாளம் காட்டி ஒப்புகொண்டதால் மேற்படி ஆவணம் குறியீடு செய்யப்படுவதாக வாதி தரப்பில் சமர்பிக்கப்பட்டது. மேற்படி ஆட்சேபனைக்குட்பட்டு ஆவணம் குறியீடு செய்யப்படுகிறது).* எனக்கு காந்திக்கும், சுமதிக்கும் நடைபெற்ற திருமணத்திற்கு நான் சென்றிருந்தேன் என்றும், வழக்கிற்காக போகவில்லை என பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. காந்திக்கும், 2ம் பிரதிவாதி சாரதாவிற்கும் 16.12.1994தேதி திருமணம் நடைபெற்றதாகவும், அதற்கு நான் சென்றிருந்ததாகவும் கூறுவது வழக்கிற்காக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சாரதா கொடுத்த புகாரின் பேரில் காந்தி மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு, அவர் சிறையில் அடைக்கப்பட்டார் என்றால் சிறையில் அடைக்கப்பட்ட விவரம் எனக்கு தெரியும், ஆனால் வழக்கு பதிவு செய்த விவரம் எனக்கு தெரியாது. அந்த புகாரில் 2ம் பிரதிவாதி சாரதா, தான் காந்தியின் 2வது மனைவி என குறிப்பிட்டு எழுதி கொடுத்துள்ளார் என்றால், அந்த விவரம் எனக்கு தெரியாது. எந்த வருடத்தில் சாரதா, காந்தியுடன் சண்டை போட்டு கொண்டு டெல்லிக்கு சென்றார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், எனக்கு தெரியாது. சாரதாவிற்கு மெர்சி என்ற

குழந்தை பிறந்த வருடம் எனக்கு தெரியுமா என்றால், 1997ல் பிறந்தார். பிறந்த குழந்தையை நான் சென்று பார்த்தேனா என்றால், சென்று பார்த்தேன். டெல்லிக்கு சென்ற 2ம் பிரதிவாதி சாரதா என்ன வேலை செய்தார், எத்தனை வருடம் அங்கு இருந்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 2ம் பிரதிவாதி சாரதா தற்போது என்ன வேலை செய்கிறார் என்றால் முன்பு கனிணி மையம் வைத்திருந்தார். தற்போது அதை நிறுத்தி விட்டார். அரசியல் கட்சியில் பொறுப்பாளராக இருக்கிறாரா என்றால், கட்சிக்கு போவார் ஆனால் என்ன பொறுப்பில் இருக்கிறார் என்று எனக்கு தெரியாது. காந்தியின் தாயார் மல்லிகா வாதிகளுடன் தான் வசித்து வருகிறார் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. காந்திக்கும், 1ம் வாதிக்கும் சட்டப்படி தான் திருமணம் நடைபெற்று, அதன் பயனாக 2 முதல் 4 வாதிகள் பிறந்தார்கள் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. வழக்கு பதிவு செய்த பின்பு தான் எனக்கு தெரியும். எனக்கு எல்லா உண்மைகளும் தெரியும் என்றும், வழக்கிற்காக அதை மறைத்து பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. காந்தியின் தாயார் மல்லிகாவை நான், எப்போதாவது சந்தித்து உள்ளேனா என்றால் இல்லை. 2ம் பிரதிவாதி எனக்கு நெருங்கிய நண்பர் என்பதால் அவர் கேட்டு கொண்டதற்கிணங்க பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அவர்கள் எனது வீட்டிற்கு அருகே வசித்து வந்தனர். அவர்கள் கணவன், மனைவியாக குடும்பம் நடத்தினர் என்ற விவரம் மட்டும் எனக்கு தெரியும். காந்தி தனது பணிபதிவேட்டில், அவரது மனைவியான சுமதியை தான் நாமினியாக நியமனம் செய்துள்ளார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. சுமதி தான்

காந்தியின் சட்டபடியான மனைவி என்றும், அது எனக்கு நன்கு தெரிந்தும் அதை மாற்றி பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/Tmt.K.R.Jothi, B.A.,B.L.
Additional District Judge,
Dharmapuri.